**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை STC 307/2021**

**நாள் 22.11.2022 புகார்தாரர் தரப்பு சாட்சி - 1 நடராஜன்** , கடந்த 07.06..2022 ஆம் தேதி முதல் விசாரணை முடிக்கப்பட்டு **குறுக்கு விசாரணைக்காக** ஒத்தி வைக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் இன்று மேற்படி சாட்சி **குறுக்கு விசாரணை** செய்யப்படுகிறார்.

**குற்றம் சுமத்தப்பட்டந பர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

1) தற்சமயம் காத்முத்து மீது எத்தனை வழக்குகள் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு வழக்கு . இந்த காத்தமுத்துவை தவிர வேறு யார் மீதாவது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம் பட்டுக்கோட்டை பன்னீர்செல்வம் என்பவர் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் 2000 ஆம் ஆண்டில் மாவட்ட உதவி கருவூல அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். இந்த 22 ஆண்டுகளில் இந்த நீதிமன்றத்தில் சுமார் எத்தனை வழக்குகளில் நான் புகார்தாரராக முன்னிலையாகி வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் ஒரு வழக்குதான்.

3) STC.No. 2012/2021 ல் ரூ. 55 லட்சம் பன்னீர்செல்வம் என்பவர் தரவேண்டும் என்று நான் தாக்கல் செய்துள்ள முறையீட்டின் **சான்றிட்ட நகல் எத.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
2013 ஆம் ஆண்டில் குணசீலன் என்பவர் மீது STC.No.662/2013 தாக்கல் செய்து அது வாபஸ் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு குணசீலன் ஞாபகம் இல்லை. அதில் சமாதன மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் அது எனது கையொப்பம் இல்லை. ( மேற்படி ஆவணத்தில் உள்ள கையொப்பமானது இந்நீதிமன்றத்தில் சான்றிட்ட நகல் தாக்கல் செய்து அதில் உள்ள கையெழுத்தை காண்பித்து கேட்கிறார்.)

4) இதே நீதிமன்றத்தில் மாணிக்கம் என்பவரது மகன் செம்பியன் மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த வழக்கு சமரசமாகிவிட்டது. STC.No.1824/2017 ஆகும். **சமரச உத்தரவு எ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டுக்கோட்டை** நாடியப்பன் நிதியகத்தின் உரிமையாளர் மீது 2010 ஆண்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம் தாக்கல் செய்துள்ளேன்.

5) மன்னார்குடி பர்மா காலனியில் வசிக்கும் முருகையன் மகன் பழனியப்பன் என்பவர் மீது இந்நீதிமன்றத்தில் 1 லட்சத்து 20 ஆயிரத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது சமரசமாகிவிட்டது. மொத்தம் இது வரை நான் எத்தனை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

6) நான் கடந்த 22 ஆண்டுகளாக நான் அரசுக்கு வருமான வரி செலுத்துகிறேனா என்றால் 2017 -2018 ஆம் ஆண்டில் வருமான வரி செலுத்தினேன். மேற்படி வருமான வரிக்கணக்குகளை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் நான் தேடி பார்க்கிறேன்., இருந்தால்

தாக்கல்செய்கிறேன். எனக்கு பேன் நம்பர் இருக்கிறா என்றால் ஆம் இருக்கிறது அதனை வேறு ஒரு செல்லில் வைத்துள்ளேன்.

7) பொதுவாக கொடுக்கல் வாங்கல் தொழில் செய்யவேண்டும் என்றால் தமிழஅரசின் அனுமதிபெறவேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் அவ்வாறு எதுவும் அனுமதி எதுவும் வாங்கி வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அனைத்து வழக்குகளுமே வட்டி இல்லாமல் பணம் கொடுத்த கடன் என்றால் சரிதான்.

8) எனக்கு எந்தெந்த வங்கிகளில் கணக்கு உள்ளதஎ ன்று சொன்னால் **பாரத ஸ்டேட் வங்கி** மன்னார்குடி, அதன் கணக்கு எண். அடுத்த வாய்தாவில் சொல்கிறேன். மன்னார்குடி **கனராக** வங்கியிலும் உள்ளது. மன்னார்குடி **ஐ.சி.ஐ.சி.ஐ** வங்கியிலும் கணக்கு உள்ளது. ஆக்சிஸ் வங்கியிலும் உள்ளது. மேற்படி வங்கிகளின் கணக்கு எண்களை வரும் வாய்தாவில் சொல்கிறேன்.

**9)** நான் வங்கி மூலமாக குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம்இருந்து பணம் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. சாட்சி சொல்கிறார். எனக்கு வயதாகிவிட்டதால் ஞாபகமறதி வேறு வந்து விட்டது.

10) 2010 முதல் 2017 வரையான காலக்கட்டங்களில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் பல சந்தர்ப்பங்களில் ஏறத்தாழ 20 லட்சம் ரூபாய் பரிவர்த்தனை செய்துள்ளார் என்று சொன்னால் மறுக்கிறேன், சரியல்ல. அவர் செக்கை கலக்சனுக்கு தருவார் நான் அதை எனது வங்கிக்கணக்கில் போட்டு பணமாக்கி திரும்ப அவரிடம் கொடுத்து விடுவேன். அது கடன் அல்ல.

11) எனது கனரா வங்கிக்கணக்கை நாளதி தேதி வரை உள்ள பரிவர்த்தனையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலுமா என்றால் சமர்ப்பிக்க இயலும். நான் அரசு ஊழியர் என்பதால் ரூ.50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பண பரிவர்த்தனை அனைத்து வங்கிமூலமாகதான் நடைபெறவேண்டும் என்று சொன்னால் சரிதான்.

12) மேற்படி பரிவர்த்தனை 2000 ஆண்டுக்கு பிறகுதான் நடைபெற்றது எனவே அது இதுக்கு பொருந்தாது. நான் கருவூலத்துறையில் பணிபுரிந்ததால் கணக்க சமப்ந்தமான பதிவேடுகள் எப்பொழுதும் வைத்திருப்பேன் என்றால் இல்லை. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் பல தவனைகளாக பெற்றேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அது எத்தனை தவனை என்றால் 12 தவனைகளில் , 12 காசேலைகள் வாங்கிக்கொண்டு பணம் கொடுத்தேன்.

13) குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் இருந்து மொத்தம் 15 கசோலைகள் பெற்றேன். அந்த 15 காசோலைகளில் எத்தனை காசோலையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் 15 யும் தாக்கல் செய்து விட்டேன். 2 வழக்கு . மேற்படி 12 காசோலைகளை எப்பொழுது பெற்றேன் என்றால் ஜனவரி 2020 லிருந்து மார்ச் 2020 வரை . மேற்படி 2020 ஆம் ஆண்டுக்கு முன்பு எனக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே பணப்பரிவர்த்தனை இருந்ததா என்றால் ஆம். இருந்தது. பணம் கொடுத்தேன் செக் வாங்கவில்லை. அதையெல்லாம் சேர்த்துதான் இந்த செக்கை வாங்கினேன்.

14) எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே வரவு செலவு எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் 2010 க்கு முன்னர் இல்லை. மேற்படி 2010 ஆண்டு முதல் 2020

ஆண்டு வரை எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே பணம் கொடுங்கல் வாங்கல் இருந்ததா? என்றால் ஆம் இருந்தது.

15) மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் பணம் கொடுத்ததற்கு ஆதரவாக , ஆதரவு ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. காசோலைமூலமாக மட்டுமே கொடுத்தேன். பணம் கொடுத்து விட்டு , பணம் திரும்ப தர தாமதமானால் அவரிடம் காசோலையை வாங்கி வைத்துக்கொள்வேன்.

16) மேற்படி எனது தரப்பு 1 வது ஆவணமான காசோலையை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் அதை குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் தான் கேட்கவேண்டும் . தேதியும் அவர்தான் போட்டுக்கொடுத்திருப்பார். காசோலையில் தேதியை பொருத்து 8 என்பதில் திருத்தம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதைநான் பெரிசாக எடுத்துக்கொள்ளவில்லை.

17) 2 வது ஆவணமாக குறியீடு செய்யப்பட்ட காசோலை எண். 1093 நடராஜன் என்ற பெயரை யார் எழுதியது என்றால் எனக்கு தெரியாது. தொகை குறித்த விவரங்கள் எழுதியது அது குற்றம் சுமத்தப்பட்ட நபர்தான். தேதிலெட்பேனாவில் உள்ளது என்றால் சரிதானன். அதிலும் தேதியில் திருத்தம் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

18) 3 வது ஆவணமாக குறியீடு செய்யப்பட்ட காசோலை எண். 001062 நடராஜன் என்ற பெயரை யார் எழுதியது என்றால் எனக்கு தெரியாது. தொகை குறித்த விவரங்கள் எழுதியது அது குற்றம் சுமத்தப்பட்ட நபர்தான். தேதிலெட்பேனாவில் உள்ளது என்றால் சரிதானன். அதிலும் தேதியில் திருத்தம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதையும் அவரிடம்தான் கேட்கவேண்டும்.

19) எனது மகன்பெயர் ராஜராஜசோழன் . குற்றம் சுமத்தப்பட்ட நபர் பணி ஓய்வுபெற்றபிறகு ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். எனக்கு மகனின் பெயரில் மனைகள் எதுவும் வாங்கப்பட்டுள்ளதா என்றால் ஆம் வாங்கப்பட்டுள்ளது. அந்த மனை யார் மூலம் வாங்கப்பட்டது என்றால் காத்தமுத்து மூலமாக வாங்கப்பட்டது.

20) மேற்படி அசல்ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். அந்த ஆவணத்தின் எண். 140/2020 என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ரூ.5 லட்சத்து 30 ஆயிரத்தை காத்தமுத்துவிடம் இருந்து எனது மகன் பெற்றுக்கொண்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

21) எனது மகள் வள்ளி தஞ்சாவூரில் இடம் வாங்கியுள்ளாரா என்றால் ஆம் வாங்கியுள்ளார்கள். அதுவும் காத்தமுத்துமூலமாகதான் வாங்கப்பட்டது. நான் கடனுக்கு ஆதரவு ஆவணங்கள் யாரிடமும் எழுதி வாங்குவது இல்லை என்றால் சரிதான். நான் அதை தொழிலாக செய்யவில்லை.

22) நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எனது கைப்பட கடிதம் எதுவும் எழுதினேனா என்றால் ஆம் எழுதினேன். எத்தனை முறை எழுதினேன் என்றால் ஞாபகம் இல்லை.

**மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிறகு குறுக்கு விசாரணை செய்யகேட்டுக்கொண்டதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

(sd/----A.S.Ameerdheen)

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.